அ
அக்கினி - தீ,நெருப்பு
அக்கினி ஜுவாலை - தீப்பிழம்பு
அங்கவீனம் - உடல் ஊனம்
அசனம் பண்ணுதல் - உணவருந்துதல்
அசுசி - அசிங்கம்
அச்சாரம் - உறுதிக்கான பிணைத்தொகை (பிணைப் பொருள்)
அஸ்தகடகங்கள் - புயத்தில் அணியும் நகை
அஸ்தமித்தல் - சூரியன் அடைதல்
அஸ்திபாரம் - கடைக்கால்
அஸ்திராயுதம் - அம்பு, ஆயுதம்
அதம் - அழிவு
அதம் பண்ணுதல் - அழித்தல்
அதரிசனம் - காணமுடியாத நிலை
அத்தாட்சி - சான்று
அநாதி - என்றுமுள்ள
அநாதி நாட்கள் - எல்லையற்ற நாட்கள்
அநீதம் - அநீதி, கள்ளத்தனம்
அந்தகாரம் - இருள்
அந்தக்கரணங்கள் - உள்மனம்
அந்தக்கரணத்தில் - உள்ளத்தின் ஆழத்தில்
அந்தரங்கம் - இரகசியம்
அந்தரவெளி - வெறுமையான இடம், மனித சஞ்சாரமில்லாத இடம்
அந்நியோன்னிய ஐக்கியம் - நெருங்கிய தோழமை
அபகரித்தல் - பறித்துக் கொள்ளுதல்
அபத்தம் - பொய், வஞ்சகம், வீண்சொற்கள்
அபயம் - மேல்முறையீடு
அபாத்திரம் - தகுதியின்மை
அபிஷேகம் - திருப்பொழிவு
அபிப்பிராயம் - கருத்து, எண்ணம்

அபூர்வம் - அரிது
அபேட்சை - விருப்பம்
அப்பியாசம் - பழக்கம்
அப்போஸ்தலர் - திருத்தூதுவர்
அரணான - பாதுகாப்பான
அரணிப்பான - கோட்டையால் வலுப்படுத்தப்பட்ட
அருக்களிப்பான - வெறுக்கப்பட்ட
அருக்களிப்பு - இகழ்ச்சி, பயம், வெறுப்பு
அருணோதயம் - விடியற்காலம்
அரோசிகமான - அருவருப்புண்டாக்குகிற,
குமட்டலுண்டாக்குகிற
அரோசித்தல் - அருவருத்தல், வேதனையுடன் சகித்தல்
அர்ப்பிதநிலம் - புனிதநிலம்
அல்லும் பகலும் - இரவும் பகலும்
அவம் - பயனற்றது
அவலட்சணம் - அழகற்ற நிலை
அவாந்தரை - மனிதசஞ்சாரமற்ற வெறுமையான இடம்
அறிக்கை பண்ணுதல் - கூறுதல்
அனுகூலமாய் - பயனுள்ளதாய், உதவியாய்
அனுக்கிரகம் - அருள்

## ஆ

ஆகமம் - புனித நூல்
ஆகாசம் - ஆகாயம்
ஆகாமியம் - தீயகுணம், தீமை
ஆக்கினை - கொடிய தண்டனை
ஆசரித்தல் - கொண்டாடுதல்
ஆசாரியன் - பூசாரி, பலி செலுத்துபவர்
ஆஸ்தி - சொத்து
ஆதாரம் - நிலைமேடை, சான்று
ஆதிக்கக்காரன் - அலுவலர்
ஆதீனம் -அதிகாரத்திற்குள்ளான பகுதி
ஆபரணங்கள் - அணிகலன்கள், நகைகள்

ஆயுதபாணிகள் - ஆயுதம் அணிந்தவர்கள்
ஆவேசம் - ஆவி

## இ

இஷ்டன் - நண்பன்
இடும்பு - இறுமாப்பு, தீங்கு
இரட்சித்தார் - காப்பாற்றினார்
இரணம் - இரத்தம்
இரண்டகம் - கலகம், புரட்சி
இரத்தாம்பரம் - ஒண் சிவப்பு
இரந்துண்ணக்கடவர்கள் - பிச்சையெடுத்து உண்பார்களாக
இரம்மியம் - மகிழ்ச்சி, திருப்தி
இராட்சதர் - அரக்கர்
இராணுவம், ராணுவம் - படை, சேனை
இராத்திரி, ராத்திரி - இரவு
இருப்பு - இரும்பு
இருப்புக்காளவாய் - இரும்பை உருக்கும் உலை
இலகு - குறைவான பழு, எளிது
இலக்கு - இலட்சியம், குறிக்கோள்
இலச்சை - அருவருப்பு, வெறுப்பு
இலச்சையான புணர்ச்சிக்காரர் - ஓரின சேர்க்கையில் ஈடுபடுவோர்
இலட்சணமில்லாதவை - மதிப்பு (அழகு) குறைந்ததாகக் கருதப்படுபவை

## உ

உகந்த - ஏற்ற, பொருத்தமான
உக்கிராணக்காரன் - மேற்பார்வையிடுபவர், பொறுப்பாளர்
உச்சிதமான - விலைமதிப்புள்ள, செழுமையான
உஷ்ணம் - வெப்பம்
உதாரகுணம் - ஈகைக்குணம்
உத்தாவாதம் - பொறுப்பு
உத்தரவாதம் பண்ண - ஈடு செய்ய

உத்தரவாதம் பண்ணுகிறவர்கள் - கணக்கு கொடுக்க வேண்டியவர்கள்
உத்தரவு - பதில், கட்டளை
உத்தியோகஸ்தர் - அலுவலர்
உத்தியோகம் - பதவி பொறுப்பு
உபகாரி - வள்ளல்
உபதேசம் - கோட்பாடு, தத்துவம்
உபாதிக்கப்படுகிறவன் - துன்புறுத்தப்படுகிறவன்
உபாதித்தல் - தாக்குதல், வேதனைப்படுத்துதல்
உபாத்தியாபர் - ஆசிரியர்
உள்ளிந்திரியங்கள் - உடலின் உட்பாகங்கள், உள்மனம்

எ

எத்தனம் - முயற்சி
எத்தனித்தல் - முயற்சித்தல்

ஏ

ஏகத்திற்கு - மொத்தத்திற்கு
ஏகவாக்கு - ஒரே கருத்துடைய சொற்கள்

ஏகோபித்து - மொத்தமாக
எந்திரம் - திரிகல்
ஏபோத்து - மேல் ஆடை

ஐ

ஐக்கியமாயிருக்கிறார்கள் - ஒற்றுமையுடன் தோழமையுடன் இருக்கிறார்கள்.
ஐசுவரியம் - செல்வம்
ஐசுவரியவான் - செல்வந்தன்

ஒ

ஒத்தாசை - உதவி
ஒப்பனையாள - ஒப்பான
ஒருவிசை - ஒருதடவை
ஒலிமுகவாசல் - கோட்டைக் கதவு

ஔ

ஔஷதம் - மருந்து

க
கஜானா - பண்டக சாலை
கடாட்சித்தருளும் - கண்ணோக்கியருளும்
கடாட்சித்தல் - கண்ணோக்குதல்
கடாட்சித்தேன் - கண்ணோக்கினேன்
கடாரி - பெண் கன்றுக்குட்டி
கட்டியக்காரன் - அறிவிப்பவன்
கணப்பு - வெப்பம் உண்டாவதற்கான நெருப்பு
கண்காணி - அலுவலர், அதிரி
கண்காணிப்பு - மேற்பாரிவையிடும் பொறுப்பு
கண்டங்கள் - (இறைச்சித்) துண்டுகள்
கண்டிதம் - கடிந்து கொள்ளுதல், கண்டித்தல்
சுந்தவர்க்கங்கள் - நறுமணப்பொருட்கள்
கட்டஸ்தன் - ஏமாற்றுகிறவன்
கபாலஸ்தலம் - மண்டையோட்டு இடம்
கம்பத்துப் பார்க்கிறவர்கள் - கப்பலில் சிறு பழுதுபார்ப்போர்
கம்மாத்தியர் - கம்மாத்தின் மனிதர்
கருக்கு - கூர்மை
கலங்கள் - கிண்ணங்கள்
கலயங்கள் - வட்டில்கள்
கலியாணம் - திருமணம்
கவை - அக்கறை கரிசனை
கழுந்துகள் - பொருத்தும் பகுதிகள் (Sockets)
களிம்பு - மாசு, காடு
கற்பனை - கட்டளை

கனதி - அளவு
கன்னார் - இரும்பு வெண்கலப் பணி செய்வோர்

கா
காடி - புளிப்பான நீர்மம்
காணியாட்சி - சொந்தமான நிலம்
காந்தி - வெப்பம் தாக்கம்
கசப்பு நாடா - வேதவசனங்கள், அடங்கிய சிறு, தோல் பேழை
காரியக்காரர் - செயலர், பணியாளர்
காரியசமர்த்தன் - செயல்திறமையுள்ளவன்
காருணியம் - சாந்தம், கிருபை அருள்
காலதாமசம் - காலதாமதம்

கி
கிட்டி - தெருங்கி
கிரகிக்கத்தக்க - புரிந்துகொள்ளத்தக்க
கிரயம் - விலை
கிராதி - பின்னல்தட்டி
கிருபாசனம் - கிருபை (அருள்), இருக்கை
கிலேசம் - துக்கம் (அவமானம்)

கீ
கீர்த்தனம் - பாடித்துதித்தல்
கீர்த்தனம் பண்ணுதல் - பாடல்களால்போற்றுதல்
கீர்த்தி - புகழ்

கு
குஷ்டம் - தொழுநோய்
குஷ்டரோகி - தொழுநோயாளி
குடியோடிப்போதல் - சிறைப்பட்டுப்போதல்
குமுறப்பண்ணுகிறார் - இடியோசை போன்று முழங்குகிறார்

கெ

கெடி - திகில்
கெபி - குகை

கை
கைலாகு - கையைப் பிடித்து நடத்தல்

கொ
கொடுப்பனை - பெண் கொடுப்பது
கொண்டல் காற்று - கீழ்காற்று
கொத்தளங்கள் - கோபுரங்கள், அரண்கள்
கொம்மை - கோபுரம், தாங்கும், பகுதி (Support)
கொள்வனை - பெண் கொள்வது
கோ
கோவில்கள்

ச
சகாயம் - உதவி
சக்கந்தம் - ஏளனம்
சக்கராகாரம் வளைவான விழிம்பு
சங்கதி - செய்தி
சங்கரித்தல் - அழித்தல்
சங்காரக்காரன் - அழிக்கிறவன்
சஞ்சரி - நட, தங்கியிரு
சணல் நூல் - பளபளப்பான வெள்ளையான நால்
சத்தியம் - பேருண்மை, உண்மை
சத்துவம் - ஆற்றல், வல்லமை
சந்திரரோகி - மனநோயாளி
சமஸ்த - எல்லா
சமஸ்தானம் - ஆட்சிப்பகுதி
சமர்த்தன் - திறமையுள்ளவன்
சமாசாரம் - செய்தி
சமுசயம் - சந்தேகம்
சமூலமும் - முழுமையும்
சம்பத்து - செல்வம்

சம்பாஷணை - உரையாடல்
சம்பாஷித்தல் - உரையாடுதல்
சம்பாரங்கள் - வாசனைப்பொருட்கள், மசாலைப் பொருட்கள்
சம்பிரதி - செயலர், எழுத்தர்
சம்பிரமமாய் - செல்வச் செழிப்பாய்
சம்பூரணம் - எல்லாவிதத்திலும் செழிப்பான நிலை
சம்மதியானால் - சம்மதமானால்
சம்யோகமாய் - சிற்றின்ப வேட்கையாய்
சரப்பணி - (தங்க) சங்கிலி
சர்ப்பம் - பாம்பு
சர்ப்பனை - சதி
சர்வாங்கம் - உடல் முழுவதும்
சல்லடங்கள் - உள்ளாடைகள்
சவதரித்தல் - சம்பாதித்தல்
சவுக்கை - நீள்சதுரத்துண்டு
சவுரியவான் - வலிமையுள்ளவன்
சன்னதக்காரன் - அசுத்த ஆவிகளுடன் தொடர்புடையவன்

சா
சாஸ்திரி - அறிஞர். ஞானி
சாதுரியவான் - சொல்வன்மையுடையவன் சிறந்த கல்விமான்
சாபத்தீடு - சபிக்கப்பட்டது, விலக்கப்பட்டது
சாயை - நிழல்
சாரதி - இரதம் ஓட்டுநர்
சாலகம் - வாய்க்கால்
சாலகத்தின் வழியாய்- சுரங்க நீர்ப்பாதை வழியாக (கொக்கிகளைப் பயன்படுத்தி)
சால்வை - அங்கி
சாவதானம் - கவனம்

சி
சிட்சை - திருத்துவதற்கேற்ற சிறு தண்டனை
சித்தம் - விருப்பம்

சித்திக்காது - வாய்க்காது
சிந்தை - எண்ணம், மனநிலை
சிரசு - தலை
சிரேஷ்டமான - சிறந்த

சீ
சீஷர்கள் - சீடர், மாணாக்கர், பின்பற்றுவோர்
சீமை - மாநிலம்
சீர்பொருந்தப் பண்ணுங்கள் - மீண்டும் சரியான நிலைக்கு வரச்செய்யுங்கள்

சு
சுகந்தவர்க்கம் - நறுமணப் பொருள்
சுகித்திருப்பார்களாக - வளத்துடனிருப்பார்களாக
சுகித்து - வளமாய் வாழ்ந்து
சுதந்தரவாளி - உரிமையாளன்
சுதன் - மகன்
சுதேசி - சொந்த நாட்டில் இருப்பவன், நாட்டின் குடிமகன்
சுத்தாங்கம் - சுத்தம்
சுபாவம் - இயற்கையான குணம்
சுமுத்திரையான - சரியான அளவுள்ள
சுயம்பாகி - அப்பம் தயாரிப்பவர்
சுயாதீனம் - அடிமைப்படாத நிலை, தன்னுரிமை
சுயாதீனன் - விடுதலையான மனிதன், அடிமையாக இல்லாதவன்
சுரமண்டலம் - நரம்பிசைக்கருவி
சுரூபம், சொரூபம் - சிலை
சுவறிப்போகும் - காய்ந்து போகும், உலர்ந்து போகும்
சுவிசேஷம் - நற்செய்தி

சூ
சூனியக்காரன் - பிசாசுகளை ஏவுகிறவன்

சே

சேஷ்டபுத்திரன் - முதல் மகன்
சேவித்தல் - உழைத்தல், கீழ்ப்படிதல்

சொ
சொப்பனம் - கனவு
சொஸ்தமடைதல் - முற்றிலும் குணமாகுதல்

சோ
சோரஸ்திரீ - விபசாரப் பெண்
சோரமார்க்கம் - வேசித்தன வழி
சோரம் போகப்பண்ணி - வேசித்தனம் செய்யப்பண்ணி

சௌந்தரியம் - கவர்ச்சியான தோற்றம்

ஜ- ஜோ
ஜலதாரை - நீர் வடிகால்
ஜலப்பிரளயம் - பெருவெள்ளம்
ஜலம் - நீர்
ஜல்லடை - சல்லடை
ஜனங்கள் - மக்கள்
ஜனசதளங்கள் - மக்களினங்கள்
ஜன்ம பூமி, ஜந்ம பூமி - பிறந்த நாடு
ஜாமக்காரர் - இரவு காவற்காரர்
ஜாமங்காக்கிறவர்கள் - காவற்காரர்
ஜாமம் - மூன்று மணிநேரம்
ஜீவஜந்துக்கள் - உயிரினங்கள்
ஜீவனம் பண்ணுதல் - வாழ்தல்
ஜீவன் - உயிர், வாழ்க்கை
ஜீவித்துப் போனான் - மரணமடைந்தான்
ஜெந்து - விலங்கு
ஜெயஸ்தம்பம் - வெற்றித்தூண்
ஜென்மநாள் - பிறந்தநாள்

ஜோஸ்யர் - சோதிடன், கணியன்
ஜோதி - பாயொளி, பேரொளி, மின்னொளி
ஜோடு - இரட்டை

ஸ்
ஸ்தம்பம் - தூண்
ஸ்தலம் - இடம்
ஸ்தனம் - மார்பகம்
ஸ்தாபனம் பண்ணுதல் - நிறுவுதல்
ஸ்தாபித்தல் - நிறுவுதல்
ஸ்தாபிப்பேன் - ஏற்படுத்துவேன், நிலைநிறுத்துவேன்
ஸ்தானம் - இடம்
ஸ்திரீ - பெண்
ஸ்துதி - துதி, போற்றுதல், பாராட்டுதல்
ஸ்தூலித்து - உடல்பெருத்து
ஸ்தோத்திரம் - நன்றி, போற்றுதல்
ஸ்நானம் செய்தல் - குளித்தல், முழுக்கு

க்ஷ, க்ஷே
க்ஷணம் - நொடி,நேரம்
க்ஷேமம் -நலம்

ஞா
ஞானஸ்நானம் - திருமுழுக்கு
ஞானதிருஷ்டி - இயற்கைக்கு மேற்பட்ட ஞானம், தீர்க்கதரிசனம்.

த
தகசுத்தோல் - வளைதோண்டி வாழும் கரடி இனவிலங்கின் தோல், நீர்நாய் இனவிலங்கின் தோல்.
தண்டல்காரர் - (வரி) வசூலிப்பவர்
தண்டாயுதம் - குண்டாந்தடி
தண்டினான் - வசூலித்தான்
தண்டுகள் - படைப்பிரிவுகள்

தண்டுதல் - வசூலித்தல்
தப்படி - காலடி
தரிசனம் - காட்சி
தரித்திரன் - ஏழை
தரித்திரு - காத்திரு
தரித்திருத்தல் - தங்கியிருத்தல்
தர்க்கசாஸ்திரி - தத்துவஞானி
தவனம் - ஏக்கம், தாகம்
தளவாடங்கள் - (கப்பற்பாய், இருப்புக்) கருவிகள்
தற்பொழிவு - சுயநலன், தற்புகழ்ச்சி

தா
தாசன் - ஊழியன்
தாணையம் - படைப்பிரிவு

தி
திடசாட்சியாய் - வலியுறுத்தி
திமிர்வாதம் - பக்கவாதம்
திரட்சியான அம்பாரம் - பெருங்குவியல்
திராணி - தகுதி
திவ்வியமான - விலையேறப் பெற்ற, சிறந்த
திவ்விய வல்லமை - தெய்வீக வல்லமை

தீ
தீபம் - ஒளி
தீவனம் - தீனி
தீவிரித்து - விரைந்து
தீழ்ப்பானது - வீணானது, கேடானது
தீழ்ப்பானவன் - இழிவானவன்

து
துஷ்டமிருகம் - காட்டு விலங்கு
துஷ்டன் - தீயவன், கொடியவன்
துணிக்கை - (ஆகாரத்) துண்டு

துதித்தல் - போற்றுதல், பாராட்டுதல்
துப்பட்டி - துணி, மேலே போர்த்திக் கொள்ளும் துணி
துப்பரவு - தூய்மை
துரவு - கிணறு
துருகம், துருக்கம் - கோபுரம்
துருத்தி - தோல் பை
துரைத்தனங்கள் - ஆட்சியாளர், ஆட்சிகள்
துரைத்தனத்தார் - ஆட்சியாளர்
துவக்கம் - தொடக்கம்

தூ
தூஷணம் - நிந்தனை
தூஷித்தல் - இழிவாகப் பேசுதல்
தூபவர்க்கம் - நறுமணப் புகைக்கான பொருள்
தூளில் - தூசியில்

தெ
தெற்கத்தி - தெற்கிலிருந்து வரும்

ந
நட்சத்திரம் - விண்மீன்
நபஸ்கரித்தல் - வணங்குதல்
நரஜீவன்கள் - மானிடர்
நவமான - புதிய

நா
நாகசுரம் - குழல்
நாயகன் - கணவன்

நி
நிக்கிரகம் பண்ணுவேன் - அழிப்பேன்
நிணம் - கொழுப்பு, எலும்பு மச்சை, எலும்புக்குள்ளிருக்கும் மென்பொருள்.
நிணந்துன்னி - கொழுப்பேறி

நிணந்துன்னியிருக்கிறார்கள் - கொழுத்திருக்கிறார்கள்
நிணம் துன்னினபோது - உருவம் விகாரமானபோது
நித்தமும் - அனுதினமும்
நித்திய - என்றுமுள்ள
நித்திரை - உறக்கம்
நியமம் - சட்டம், ஒழுங்குமுறை, கட்டளை
நிருபம் - கடிதம்
நிர்த்தூளியாக்கி - அழித்து
நிர்த்தூளியாக்குதல் - அழித்தல்
நிர்மூடன் - உணர்வில்லாதவன்
நிர்விசாரம் - அக்கறையின்றி இருத்தல்
நிலைவரப்படுத்த - உறுதிப்படுத்த, செயல்படுத்த, நிலையாக இருக்கும்படி செய்ய
நிலைவரப்படும் - வாய்க்கும், நடக்கும், நிலைபெறும்
நிதானித்தல் - திறனாய்தல், மதிப்பிடுதல்
நியாயசாஸ்திரி - நியாயப்பிரமாண வல்லுநர், வழக்குரைஞர்
நியாயசாதுரியன் - வழக்குரைஞர்

நூ

நூதனம் - புதியது

ப

பகிடியாய் - ஆச்சரியத்துடன், அதிர்ச்சியுடன்
பகுதி கட்டுதல் - கப்பம் கட்டுதல்
படவு - படகு
படைச்சால் - உழுசால்
பட்சணம் - தின்பண்டம்
பட்சம் - விருப்பம்
பட்சி - பறவை
பட்சிக்கிறவன் - (கொன்று) உண்பவன், அழிக்கிறவன்
பட்சித்தல் - தின்னுதல்
பட்டயக்கருக்கு - வாளின் கூர்மையான பகுதி
பட்டயம் - வாள்
பதார்த்தங்கள் - பொருட்கள்

பதிவிருத்தல் - தாக்குவதற்காக மறைவிலிருத்தல்
பரஸ்திரீ - அந்நியப் பெண்
பரதேசி - அந்நியன், சொந்தநாடு இல்லாதவன்
பரம் - வானுலகு
பரம்படித்தல் - நிலத்தைப் பண்படுத்துதல், மண் கட்டிகளை உடைத்துச் சரிசெய்தல்
பரிகரித்தல் - முற்றிலும் அழித்தல்
பரிகாரி - குணமளிப்பவர்
பரிசம் - மணமகன் பெண்வீட்டாருக்கு அளிக்கும் பொருள்
பரிசை - சிறுகேடகம்
பரிச்சேதம் - சிறிதும்
பரிதானம் - கையூட்டு, இலஞ்சம்
பரிமள தைலம் - நறுமண தைலம்
பரிமள வர்க்கங்கள் - நறுமணப் பொருட்கள்
பரியந்தம் - வரை, அளவு
பரியாசம் - ஏளனம்
பரிவாரம் - திரள்
பரீட்சை - சோதனை, தேர்வாய்வு
பரீட்சை பார்த்தல் - சோதித்தல், பரிசோதித்தல்
பருமன் - பெரியது
பர்வதம் - மலை
பலகணி - சன்னல், பின்னல்தட்டி
பலட்சயம் - பலவீனம்
பலவந்தர் - வலிமையுள்ளவர்
பலுகுதல் - எண்ணிக்கையில் பெருகுதல்
பவுஞ்சு - குழாம்
பறிகாரர் - வழிப்பறிக்காரர், கொள்ளையடிப்பவர்கள்

பா
பாகை - தலைப்பாகை, சூரிய கடிகாரத்தின் குறியீடுகள்
பாக்கியம் - பேறு
பாக்கியவான் - பேறு பெற்றவன்
பாஷை - மொழி

பாண்டம் - பாத்திரம்
பாதசாங்கள் - காலில் அணியும் நகை
பாதாட்சை - காலணி
பாத்திரன் - தகுதியுடையவன்
பாத்திரவான் - தகுதியுடையவன்
பாரிசம் - பக்கம்
பாழ்க்கடிப்பு - பேரழிவு
பானபாத்திரக்காரன் உணவு, பானம் பரிமாறுபவன்

பி
பிச்சு - நஞ்சு, பித்தநீர், ஈரல்
பிட்குதல் - துண்டுதுண்டாகப் பகுத்தல்
பிணி - நோய்
பிணைப்படுவது - உத்தரவாதம் அளிப்பது
பிரசித்தம் - தெரியவருதல், தெரியப்படுத்துதல்
பிரஸ்தாபம் - புகழ்ச்சி, பலருக்கு அறிவித்தல்
பிரதாபம் - மாட்சி
பிரதான ஆசாரியன் - தலைமைப் பூசாரி
பிரதானம் - முக்கியம்
பிரதானி - அலுவலர்
பிரதிக்கினை - உறுதியான தீர்மானம்
பிரதிஷ்டை - திருப்பொழிவு
பிரதிபலன் - (செயலின்) எதிர்விளைவு, வெகுமானம்
பிரதியுத்தரம் - மறுமொழி
பிரத்தியட்சமாக - காணும்படியாக
பிரத்தியேகமான இடம் - உள்ளறை, சுற்றுக்கட்டு, முற்றம்
பிரபஞ்சம் - உலகம்
பிரபந்தம் - நூல்
பிரபலஸ்தர் - புகழ் பெற்றவர்கள்
பிரபலம் - புகழ், செல்வாக்கு அடைதல்
பிரமாணம் - சட்டம்
பிரயத்தனம் - முயற்சி
பிரயாணக்காரன் - பயணி

பிரயோகம் பண்ணினேன் - ஈடுபடுத்தினேன்
பிரயோகிக்க - பயன்படுத்த, தைரியமாகக் கூற
பிரயோஜனம் - பயன்
பிரயாணம் - பயணம்
பிரவேசித்தல் - புகுதல், நுழைதல்,
பிராணன் - உயிர்
பிராது - முறையீடு
பிரார்த்தனை - நோன்புறுதி
பிரார்த்தித்தல் - விண்ணப்பம் செய்தல்
பிரார்த்தித்தேன் - வேண்டிக்கொண்டேன்
பிரியாது, பிராது - குற்றஞ்சாட்டுதல்
பிரீதி - விருப்பம், ஏற்றுக் கொள்ளுதல்
பிரீதியாய் - பாராட்டத்தக்கதாக
பின்தண்டு - படையின் பிற்பகுதி

பு
புசல் - சுழற்காற்று, புயல்
புஸ்தகம் - நூல்
புஷ்டியான - கொழுமையான, உடல் பெருத்த
புஷ்பம் - மலர், பூ
புத்திரன் - குமாரன், மகன்
புத்திரி - குமாரத்தி, மகள்
புயம் - மேற்கை
புருஷன் - ஆண், கணவன்
புறஜாதி - இஸ்ரவேலரல்லாதோர்
புறக்கணித்தல் - நீக்குதல்

பூ
பூச்சக்கரம் - பூமி
பூஷணம் - நகை
பூஜாசாரி - பூசாரி
பூரிகை - எக்காளம்
பூர்வம் - ஆதி
பூர்வோத்திரம் - வம்சாவழி

பெ

பெண்சாதி - மனைவி
பெருநெஞ்சுள்ளவன் - பெருமையுள்ளவன்

பே

பேதலிக்கிறவர்கள் - வழியறியாமல் திகைக்கிறவர்கள்
பேரீந்துகள் - பேரீச்ச மரங்கள்
பேலியாளின் மனுஷர் - பயனற்றவன், தீயவன்

பொ

பொட்டப்பு - அந்துப்பூச்சி, துணிகளை அரிக்கும் பூச்சி
போஷித்தல் - உணவளித்தல், தேவைகளைச் சந்தித்தல்
போஜனம் - உணவு
போதகம் - அறிவுரை

பௌ

பௌத்திரன் - பேரன்

ம

மச்சங்கள் - மீன்வகைகள்
மணியக்காரன் - மாவட்ட அலுவலர்
மத்தியஸ்தன் - நடுவர், இடையீட்டாளர்
மந்திரி - பதிவு எழுத்தர்
மழை வருஷித்தல் - மழை பெய்யச் செய்தல்
மறுஜென்மம் - மறுபிறப்பு
மறுதலித்தல் - தெரியாது என்று கூறுதல்
மனஸ்தாபப்படுதல் - மனம் வருந்துதல்
மனஸ்தாபம் - மனத்தாங்கல்

மா

மாகாணம் - நாட்டின் பகுதி
மாதிரி - முன்மாதிரி, பின்பற்றத்தக்க வழிகாட்டி
மார்க்க பேதங்கள் - கருத்து வேறுபாடுகள்

மார்க்கம் - வழி, சமயம்
மார்க்கவசம் - மார்பைக் காக்கும் கவசம்
மாறுத்தரம் - மறுமொழி
மாறுபாடு - தவறான போக்கு, குணக்கேடு
மாற்றான் - எதிரி, வேற்று மனிதன், பிறன்

மி
மிருதுச்செடி - பசுமை மாறாத நறுமணச்செடி
மிலாறு - தடி, கோல்
மில்லோ - அடுக்குத்தள கட்டுமானம்

மு
முகதாட்சண்யமில்லாமல் - நடுநிலை தவறாமல்
முகனை - முகப்பு
முகாந்தரம் - காரணம்
முஸ்திப்பாக்கி - பளபளப்பாக்கி
முதிராப்பிண்டம் - செத்துப்பிறந்த குழந்தை
முற்றிக்கை - முற்றுகை

மூ - மொ - மோ
மூர்க்கம் - கோபவெறி
மொக்கு - குமிழ்
மோகித்த - இச்சித்த

ய-யௌ
யதார்த்தம் - உண்மை, நீதி
யாகம் - பலி
யாத்திரை - பயணம்
யுக்தி - ஞானம், சமயோசிதம்
யுத்தசந்நத்தர் - போருக்குத் தயாரானவர்கள்
யுத்தசன்னத்தம் - போரில் ஆயத்தமாயிருப்பது
யுத்தம் - போர்
யௌவனம் - வாலிபம்

ர-ரோ
ரஸ்துக்கள் - துணைக்கலப் பொருட்கள், தேவைப் பொருட்கள்
ரதசாரதி - இரதம் ஓட்டுபவர்
ராசியாகி - ஒப்புரவாகி
ராஜஸ்திரீ - அரசி
ராஜாங்கம் - அரசபதவி
ராஜாத்தி - அரசி
ராஜ்யபாரம் - அரசுப்பொறுப்பு
ராஜ்யம் - அரசு
ரிஷபம் - காளை
ரூபவதி - அழகி
ரூபித்தல் - நிரூபித்தல்
ரோகம் - நோய்

ல-லௌ
லவுகீக - உலகைச் சார்ந்த
லோகாதிபதி - உலக அதிபதி, உலக ஆட்சியாளர்
லௌகீக - இவ்வுலகுக்குரிய

வ
வகையரா - தோழர்கள், சார்ந்தவர்கள்
வசனிக்கப்படும் - கூறப்படும்
வசனிப்பு - சொல்லலங்காரம்
வச்சிரக்கல் - சிவப்பு மஞ்சள் அல்லது பழுப்பு நிறமுடைய மாணிக்கம்
வஸ்திரம் - ஆடை
வஸ்து - பொருள்
வண்டில் - வண்டி
வந்தனம் - மரியாதை, வணக்கம்
வருஷம் - ஆண்டு
வருஷியாமல் - பெய்யாமல்
வர்த்தகர் - வணிகர்
வர்த்தமானங்கள் - நிகழ்ச்சிகள்

வர்த்திக்கப்பண்ணுவார் - பெருகச் செய்வார்
வர்த்தித்து விருத்தியாகுங்கள் - திரளாய்ப் பெருகுங்கள்
வலுசர்ப்பம் - பெரிய விலங்கு,பெரிய பாம்பு
வலுசர்ப்பத் துரவு - பாம்புக்கிணறு
வல்லடி - பலாத்காரம்
வறளவும் - வறண்டு போகவும்
வன்கண் - இரக்கமற்ற நிலை
வன்கண்ணன் - கஞ்சன்

வா
வாகனம் - விலங்கு, கழுதை
வாக்குத்தத்தம் - வாக்குறுதி
வாசஸ்தலம் - உறைவிடம்
வாசி - நல்லது, சிறந்தது
வாச்சி - உளி
வானராக்கினி - வானத்து அரசி

வி
விகற்பமாய் - வேறுவிதமாய்
விக்கிரகம் - வழிபாட்டிற்கான சிலை
விக்கினங்கள் - ஆபத்துகள்
விசாரணைக் கர்த்தர் - பொறுப்பான அலுவலர்
விசாரம் - கவலை, மனவேதனை
விசாரிப்புக்காரன் - பொறுப்பாளர்
விசித்திரத் தொழில்காரர் - நுட்பவேலை செய்பவர்
விசேஷம் - சிறப்பு
விஸ்தரித்து - விளக்கமாக
விஸ்தாரமான - அகலமான
விஸ்தாரம் - பெரிதாகப் பரந்திருத்தல்
விஸ்தீரணமான - அகன்ற
விஷம் - நஞ்சு
விடாய்த்ததும் - தாகமுள்ளதும், களைப்புள்ளதும்
விடாய்த்தவன் - களைப்படைந்தவன்
விடாய்த்திருத்தல் - களைப்பாயிருத்தல்

விதானித்திருந்தது - கட்டப்பட்டிருந்தது
வித்தியாசாலை - பள்ளி, கல்விக்கூடம்
விருட்சங்கள் - மரங்கள்
விருதா - வீண்
விருத்தமாயிராமல் - வளைவாயிராமல்
விருத்தாப்பியம் - முதிர்வயது
வியர்த்தமான - வீணான, தேவையற்ற
வியர்த்தம் - பயனற்ற, ஏமாற்றும் தன்மையுடைய
வியாக்கியானம் - பொருளுரைத்தல், விளக்கம்
வியாகுலம் - மனவேதனை
வியாஜ்யம் - வழக்கு
வியா தியஸ்தன் -நோயாளி
விவாகம் - திருமணம்

வே
வேதபாரகர் - வேதத்தை நகல் எடுப்பவர்கள்
வேவித்து - வேகவைத்து